REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணுதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 17உ வியாழன் (2—12—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 18உ வெள்ளி (3—12—54) [இதழ் 147

## மணப்பாட்டில் கடல் அரிப்பு: 15 வீடுகள் தரைமட்டம்

நெல்லை ஜில்லாவைச் சேர்ந்த மணப்பாட்டில் கடந்த ஒரு மாதகாலமாக, கடல், ஊரை நெருக்கி அரித்துக்கொண்டே வந்து வீடுகளின்மேல், அலைகள் உக்கிரமாகத் தாக்கியதால் சுமார் 15 வீடுகள் இடிந்து நாசமாகிவிட்டன. இன்னும் அநேக வீடுகள் அபாயத்துக்குள்ளாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட இடத்தை அமைச்சர் பக்தவத்சலம் பார்வையிட்டார். அதசமயம் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.

உடைந்த வீடுகளில் 'நவ ஜீவன்' என்ற பெரிய வீடும், 'சாந்தி பவனம்' என்ற அழகிய வீடும் குறிப்பிடத்தக்கது.

# 'செயலாற்ற முடியாத தியாக போதனையால் பயனில்லை'

## 'இவ்வுபதேசம் கேட்டைத் தரக்கூடியது'

## 'பின்பற்றத்தக்க இலட்சியங்களையே மாணவர் அறியச்செய்ய வேண்டும்'

*திருப்பதி பல்கலைக்கழகத் துணைவேந்தர் அறிவுரை*

"எதிர்காலத்தில் தங்களுடைய வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக்கொள்வதற்கு இளைஞர்கள் கற்பிக்கப்பட வேண்டும். பின்பற்றத்தகுந்த இலட்சியங்களையே அவர்கள் அறிய வேண்டும். தியாகம் செய்ய வேண்டும் என மாணவர்களுக்குப் போதிப்பதினால் ஒருவித நற்பயனும் விளையாது. இது செயல்படுத்த முடியாதது. இந்த உபதேசம் சமுதாயத்திற்குக் கேட்டினைத் தரக்கூடியது- செல்வத்தையும், அதிகாரத்தையும் பெற மேற்கொள்ளும் முயற்சியில் தவறு ஒன்றுமில்லை. ஆனால், அப்படிப் பெறுகிற செல்வத்தையும் அதிகாரத்தையும் பிறரின் நலத்திற்காகவே பயன்படுத்த வேண்டும்."

"கல்லூரி போதனு மொழி குறித்து நினைப்பது இத்தருணத்தில் கூடாது. இத்துறையில், சிறிய அளவில் முயற்சிப்பதற்கு இடமிருக்கிறது."

—இவ்வாறு, திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழக துணைவேந்தரான டாக்டர் எஸ். கோவிந்தராஜுலு அவர்கள், மேற்படி கழகப் பொதுக்கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:— "கல்வித் துறையில் உறுதிப்பாடு இருக்க வேண்டும். ஒரு கல்வி முறையிலிருந்து மற்றொன்றிற்கு விரைந்து செல்ல மக்கள் விரும்புகின்றனர். இவ்விரைவின் காரணமாகக் கிடைக்கும் தண்டனையையும் அவர்கள் ஏற்கத்தான் வேண்டும்."

பல்கலைக் கழகப் படிப்பின் நோக்கம் பற்றி அவர் குறிப்பிட்டதாவது:—

"கல்வி நிலையங்களின் தலைவர்களிடத்தில் மக்கள் நம்பிக்கை வைக்கவேண்டும். ஒவ்வொரு மாணவனுக்கும், எது சிறந்ததோ, அதை அவர்கள்போதிப்பர். சுய முயற்சியால் வாழத் தகுந்த தந்திரம் படைத்தவர்களாக மாணவர்களை உருவாக்கி, பல்கலைக் கழகத்தைவிட்டு அவர்கள் வெளியேற்றுவர்."

கல்லூரிகளில் மேற்கொள்ள வேண்டிய போதனு மொழிகள் பற்றி அவர் குறிப்பிட்டதாவது:— "உலகத்திலுள்ள விஞ்ஞானக் கலை அனைத்தையும் மாணவர்கள் அறிய வாய்ப்பிருக்க வேண்டும். எனவே, போதனு மொழி விஷயத்தில் தவறிழைக்கக் கூடாது; அப்போக்கைத் திருத்திக் கொள்ளுவார்களென நம்புகிறேன்."

## முற்றுகையிடுவது சாத்தியமாம்!

டல்லஸ் பேசுகிறார்

"செஞ்சீனுவில் உளவு வேலை செய்ததாகக் கைது செய்யப்பட்டுள்ள 13 அமெரிக்கர்களை விடுவிக்க, சமாதான முறையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தோல்வியுற்றால், சீன நாட்டை அமெரிக்கக் கடற்படை முற்றுகையிடுவது சாத்தியமே," என்று, ஜான் பாஸ்டர் டல்லஸ் நிருபர்களிடம், கூறியிருக்கிறார்.

இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதைத் தெரிவிக்க அவர் மறுத்து விட்டாராம்.

* * *

## சீனு தாக்கப்படலாம்?

அமெரிக்க சர்க்காருக்கும் சியாங் சர்க்காருக்கும் இடையில் ஏற்படவிருக்கும் புதிய ஒப்பந்தம் ஒன்றின்படி, பார்மோசா தாக்கப்பட்டால் சீனுவுக்கும் அமெரிக்காவிற்குமிடையில் யுத்த நிலைமை ஏற்பட்டிருப்பதாக பாவிக்கப்படுமென்றும், இதன் விளைவாக சீனத் தாயகம் திருப்பித் தாக்கப்படலாமெனவும் டல்லஸ் கூறியிருக்கிறாராம்.

## 'விஞ்ஞான விளக்களித்த ஆங்கிலத்தைக் கைவிடக்கூடாது'

## 'இந்தி வளமடைந்த பின்பே போதனுமொழியாக வேண்டும்'

### டாக்டர் பட்நகர் கருத்துரை

"விஞ்ஞானத்திலும், இலக்கியத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்ட, நாம் பெற்றுள்ள முக்கிய இடத்தை விட்டு அகல விரும்பமாட்டோம். அச்சிறந்த இடத்தைப் பெற ஆங்கிலக் கல்வி நமக்கு துணை செய்திருக்கிறது. எனவே, கல்வித் துறையில் ஆங்கிலம் இரண்டாவது கட்டாய பாடமாக இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும்."

"பரிசுத்தமான திருத்தமுள்ள மொழியாக இந்தியை உருவாக்கிய பின்னர்தான், பாடங்கள் அனைத்தையும் அம்மொழியில் போதிக்கும் முயற்சியில் தலையிட வேண்டும். நவீன எண்ணங்களை பிழையின்றி உணர்த்த, அதற்குத் தேவைப்படும் போதிய கலைச் சொற்களைக் கொண்டதாக இந்தி இருக்க வேண்டியது கட்டாயமாகிறது."

—இவ்வாறு, பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவராக உள்ள டாக்டர் பட்நகர், பீகார் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

தங்கள் செல்வ நிலை அனுமதிக்கிற அளவில், கல்வி - ஆராய்ச்சித் துறைகளில் முற்போக்கான முறைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு மாகில அரசாங்கங்களுக்கு இருக்கிறது என்றும், வெளியிடங்களில் இருந்துவரும் பணஉதவியை எதிர்பார்ப்பது பல்கலைக் கழகங்களின் உரிமைக்கு ஊறு விளைவிப்பதாகும் என்றும், தங்கள் உரிமைக்கு ஊறுதேடும் ஒரு செயலை மானியக் குழு ஆதரிக்காது என்றும், அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும், புதிய இலட்சியங்களை உள்ளடக்கி, புதிய பல்கலைக் கழகங்களுக்குத் திட்டம் தீட்ட வேண்டும் என்றும், இப்பொழுது இருந்துவருவது போன்றே மேலும் பல பல்கலைக் கழகங்களை உருவாக்குவதினால் அதிக நன்மை ஏற்பட்டுவிடாது என்றும், எண்ணிக்கையைப் பெருக்குவதைக் காட்டிலும் இருப்பவைகளை ஒன்றுபடுத்தி வலுப்படச் செய்வதே நன்மை தரும் என்றும் குறிப்பிட்டார்.

## இப்போது இல்லை!

புதுடில்லி, டிச. 1—

தொழிலாளர்கள் வேலையை காலந் தாழ்த்தும் கொள்கையை சட்ட விரோதமானதாக்குவதற்கான சட்டமியற்றும் நோக்கம் சமீபத்தில் இல்லை எனவும், அவ்வாறு சட்டமியற்றினால் தொழிலதிபர்கள் அதைத் தவறான வழியில் உபயோகிக்கக்கூடுமெனவும் மத்திய தொழிலாளர் மந்திரி கந்துபாய் தேசாய் மக்கள் சபையில் அறிவித்திருக்கிறார்.

தற்பொழுது செய்யக்கூடியது, தொழிலில் தாமதம் செய்வதை எதிர்த்து மக்கள் கருத்தை உருவாக்குவதுதான் என்றும், இரண்டு வருடங்களில் எவ்வித பலனும் கிடைக்காவிடின் காலம் தாழ்த்துவதை வேலை நிறுத்தமெனக் கொள்ள வேண்டிய நிலை வரக்கூடுமெனவும் அவர் கூறியிருக்கிறார்.

## நீதிபதிகள் நியமனத்தில் கருத்து வேறுபாடு!

*மைசூர் அரசாங்கமும், பிரதம நீதிபதியும் வேறு வேறு பெயர்களை சிபாரிசு செய்துள்ளனராம்*

மைசூர் உயர்நீதி மன்றத்திற்கு இரண்டு நீதிபதிகளை நியமிப்பதில் அரசாங்கத்திற்கும், பிரதம நீதிபதிக்கும் கருத்து வேறுபாடு தோன்றியுள்ளதாம்

மத்திய அரசாங்கத்திற்கு இருவரும் அனுப்பியுள்ள சிபாரிசுகளில், வேறு வேறு பெயர்களைக் குறிப்பிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மத்திய அரசாங்கம் இன்னும் எவ்வித முடிவும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிகிறது.

அடுத்த ஏப்ரலில் இப்போதுள்ள பிரதம நீதிபதி ஓய்வு பெறுகிறார் என்றும், அந்த இடத்திற்கு திரு. வெங்கட்ராமையா என்பவரைச் சிபாரிசு செய்வதென சர்க்கார் முடிவு செய்திருப்பதாயும் கூறப்படுகிறது.

அந்த இடத்திற்கு வெளியார் யாரும் நியமிக்கப்படுவதை மைசூர் அரசாங்கம் எதிர்க்குமாம்.

## பண்டித பந்த்

### மத்திய மந்திரியாகிறார்!

புதுடில்லி, டிச. 1—

உத்திர பிரதேச முதன் மந்திரியாயிருக்கும் பண்டித கோவிந்த வல்லப பந்த் மத்திய அரசாங்க மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிரதம மந்திரி பண்டித நேருவின் ஆலோசனைக்கிணங்க, ஜனாதிபதி இராஜேந்திர பிரசாத், அவரது நியமனத்திற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளாராம்.

இவர் மத்திய மந்திரியாகக் கூடும் என ஏற்கனவே யூகிக்கப்பட்டதுதான்.

பந்த். மத்திய அரசாங்கத்தில் உள்நாட்டு மந்திரியாகக் கூடும் எனத் தெரிகிறது.

டிசம்பர் இறுதியில், பந்த், தனது புதிய பதவியை ஏற்றுக் கொள்ளக்கூடும்.

உடல் நலமின்றி யிருக்கும் இவர், புதுப் பதவி ஏற்குமுன் சின்னுட்கள் ஓய்விலிருக்க விரும்புவதாக அறிவித்துள்ளாராம்.

## கோதாவரி திட்டத்தில் திருட்டு

### சுமார் ஒரு லட்சம் ரூபாய் நஷ்டம்?

செகந்திராபாத். டிச. 1—

கோதாவரி வடக்கு கால்வாய் திட்டத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த துத்தநாகத் தகடுகள், ஏராளமான எஃகுச் சாமான்கள் ஆகியவை திருட்டுப் போயின என்று தெரிகிறது.

இப்படித் திருட்டுப் போன சாமான்களின் மதிப்பு ரூ. 80,000 இருக்குமென்று தெரிகிறது.

இத்திட்டத்தில் 'ஸ்டோர் கீப்ப'ராக வேலை பார்த்துவந்த அலிபின் ஓமர் என்பவரை நவம்பர் 11-ந் தேதியிலிருந்து காணவில்லையாம்.

தற்காலிகமாக வேலை பார்க்கும் மேஸ்திரி ஒருவரைப் போலீசார் காவலில் வைத்துள்ளனர் என்று தெரிகிறது.

திட்ட அதிகாரிகளிடம், டாட்டா கம்பெனியார் எஃகுச் சாமான்கள் விற்பனைக்கான பணத்தைக் கேட்டபோது, மராமத்து இலாகாவினர், காணுமற் போன சாமான்களின் மதிப்பைக் கணக்கிட்டார்கள் என்று தெரிகிறது.

தாங்கள் இச்சாமான்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்று திட்ட அதிகாரிகள் கூறினர்களாம். பின்னர் சாமான்களை சப்ளை செய்த டாட்டா கம்பெனியார் போலீசாரிடம் புகார் செய்தனர் என்று தெரிகிறது.

இதற்குப் பின்னர், போலீசாரின் உதவியுடன் நடைபெற்ற விசாரணையில், ரூ. 50,000 பெறுமான துத்தநாகத் தகடுகளும், ரூ. 30,000 பெறுமான எஃகுச் சாமான்களும் திருட்டுப் போயின என்று தெரிந்ததாம்.

## சாத்தியமில்லையாம்!

கல்கத்தா, டிச. 1—

அணுசக்தியை ஆக்க வேலைக்குப் பயன்படுத்துவது இன்னும் 25 வருடங்களுக்கு சாத்தியமில்லை என்றும், மின்சார உற்பத்திக்கு வேண்டிய அணுப் பொருளான உயர்ந்த ரக யுரேனியம் இந்தியாவில் கிடைக்கவில்லை என்றும் பிரபல விஞ்ஞானப் பேராசிரியர் சத்தியேந்திரநாத் போஸ் கூறியுள்ளாராம்.

## ஆடம்பரத்தைக் கைவிடுக!

பாட்டியாலா, நவ. 30—

பெப்சு மாநிலத்தில் உள்ள பெண்கள் கல்வி நிலையங்களில் பணியாற்றும் ஆசிரியைகள், உதட்டுக்குப் பூசுகிற சாயம் (லிப்ஸ்டிக்) போன்ற அலங்காரப் பொருள்களை உபயோகிக்கக் கூடாதென அரசாங்கம் தடைவிதித்துள்ளதாம்.

வகுப்புகளுக்கு வரும்போது ஆசிரியைகள், ஆடம்பரமின்றி சாதாரணமான தூய உடைகள் அணிந்து வர வேண்டுமென்றும் கல்வி இலாகா உத்திரவு கூறுகிறதாம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 2—12—1954 வியாழன்

# ‘நெல்லுக்கிறைத்த நீர்...’

ஓராண்டு கடன் ஒத்தி வைப்பு ஏற்பாடு அவசர சட்டத்தில் பிறந்து, பின்னர் சட்ட உருவம் பெற்றது. அந்தச் சட்டத்தால் கெடுபிடி வசூலுக்குப் பலியாகாமல், சென்ற ஓராண்டு காலமாக நிவாரணம் பெற்றவர்களில் சிறுசிறு நிலச் சொந்தக்காரர்கள், குத்தகைதாரர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும், வருமான வரி கட்டக்கூடிய வேறு தொழில்களில் ஈடுபடாத பெரும் பெரும் நிலச் சொந்தக்காரர்களின் எண்ணிக்கைதான் கூடுதலாக இருக்கும்.

மேற்படி சட்டத்தினுல் தற்காலிக மனச்சாந்தி பெற்ற சிறுசிறு நிலச் சொந்தக்காரர்களின் தொகையை நிர்ணயித்துக் கூறுவதற்குப் போதிய புள்ளிவிவர ஆதாரங்கள் கிடையாது. அதுபோன்றே, சட்டத்தின் கீழ் சுகம் பெற்ற பெரும் நிலப் பிரபுக்களின் தொகையை வரையறுத்துக் குறிப்பிடுவதற்கும் போதிய ஆதாரமில்லை. வேறு எதற்காகவோ, எப்பொழுதோ சேகரித்த புள்ளி விவரங்களை முன்தள்ளி, பிரஸ்தாப விவகாரத்தில் வாதாடக் கிளம்புவது வீண் வேலையேயாகும்.

சிறு சிறு நிலச் சொந்தக்காரர்கள் பிறரிடமிருந்து கடன் பெறுவதற்கும், பெரும் பெரும் நிலப் பிரபுக்கள் கடன் வாங்குவதற்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் உண்டு. குறைந்த நிலங் கொண்டவர்கள் கடன் பெறுவது என்பது, பெரும்பாலும் தங்கள் நிலத்தை ஈடு காட்டி சட்டப்படி பதிவு செய்து பெறும் நில அடமானக் கடனேயாகும். இவ்வாறு நிலத்தை ஈடு காட்டித்தான் கடன் வாங்க வேண்டும் என்ற நிலை, பெரும்பான்மை மிட்டா மிராசுதார்களுக்குக் கிடையாது. அவர்கள் பெறும் கடன் எல்லாம், நிலத்தை ஈடுவைத்துப் பதிவு செய்யாது, அரசாங்கப் பில்லை மீது கையொப்பம் வைத்துப் பெறுகின்ற கடனேயாகும்.

சிறு நிலம் படைத்த ஏழையின் சொத்தை ஈடு வைத்துக் கொண்டு, அடமானக் கடன் கொடுத்துள்ள ‘நல்லவர்கள்’, கொடுத்த கடனைத் திரும்பப் பெறுவதில் பொதுவாகத் துடிதுடிக்கமாட்டார்கள். அப்பொழுதுதான் வட்டி மேல் வட்டி கூடி, சேர்ந்த முதலையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த முடியாத ஒரு திண்டாட்ட நிலை அடமானக் கடன் வாங்கியுள்ள ஏழை விவசாயிக்கு ஏற்படவும், அதன் காரணமாக அடமானம் வைத்த நிலத்தின்மீது மேலும் கொஞ்சம் பணம் வாங்கிக் கொண்டு, முடிவாகக் கடன் கொடுத்தவரிடமே அடமானம் வைத்த நிலத்தை ஒப்படைத்து விட வேண்டிய கட்டாயமும் ஏற்படும். எனவே, தனக்கு நலம் தரும் இத்தகு சூழ்நிலையைத் துரிதப்படுத்துவதில் தான், நிலத்தை ஈடாக வைத்துக்கொண்டு கடன் கொடுப்பவர் கண்ணும் கருத்துமாக இருப்பார்.

ஓராண்டு கடன் ஒத்திவைப்புச் சட்டத்தின்கீழ், தான் கொடுத்தக் கடனை ஓராண்டுக்குள் வசூல் செய்ய முடியாது போய்விடுகிறதே என்ற ஏக்கமோ, கொடுத்தக் கடன் திரும்பச் செலுத்தப்படாமல் போய்விடுமோ என்ற அச்சமோ, நிலத்தை ஈடாக வைத்துக்கொண்டு ஏழை உழவனுக்குக் கடன் கொடுத்த கனவானுக்கு ஒருக்காலும் இருக்காது. ஆனல், அதற்கு மாருக, அடகு வைத்த ஏழையின் நிலத்தை தனதாக்கிக் கொள்ளும் தனது உள்ளெண்ணத்திற்கு, கடன் ஒத்திவைப்புச் சட்டம் குறைந்த அளவாவது உதவி செய்கிறதே என அவன் உள்ளூர மகிழவும் செய்வான். மேற்கண்ட சட்டம் மேலும் நீடிக்காதா என அவன் விரும்பினுலும், அது ஆச்சரியப் படக்கூடியதல்ல.

ஏழையின் குடுமியைக் கெட்டியாகப் பிடித்து வைத்துக்கொண்டு கடன் கொடுக்கும் வட்டித் தொழில் ‘வள்ளல்கள்’ எவரும், கடன் வாங்கினவன் கடனைக் கொடுப்பதில் தாமதம் காட்டுகிருனே என்பதற்காகக் கவலைகொள்வது கிடையாது. காலாகாலத்தில் வட்டிப் பணம் பெட்டியில் வந்துவிழவில்லையே என்றகவலை மட்டுமே அவனுக்கு இருக்கக் கூடும். நிலபுலன்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனும் உள்நோக்கத்துடன் அடகுக்குக் கடன் கொடுக்க முன்வரும் ‘கருணமூர்த்தி’களுக்கு, அடகுவைத்த ஏழையின் உடைமையை உரிமையாக்கிக்கொள்வதில்தான் நோக்கம். இந்த குணளர்கள், கடன்பட்டவன், கடனைத் திருப்பிக் கொடுக்கத் தானுக முன்வந்தாலுங்கூட, கொடுத்தக் கடனைப் பெற்றுக் கொண்டு, அடகை விடுவிப்பதற்கு மனம் வருவதில்லை. திருப்பிக் கொடுக்க வந்தக் கடன் தொகையைக் கடன் பட்டவரே, திரும்ப எடுத்துக் கொண்டு போகும் அளவிற்கு, வாழைப் பழம்போல் இனிப்பாகவும், விளக்கெண்ணெய் போல் வழவழ எனவும் பேசி, ஈடு வைத்த சொத்தைக் கொள்ளை கொள்ளும் குள்ள நரிகளும் இந்தத் தொழிலில் ஏராளமாக உள்ளனர்.

எனவே, நிலத்தை ஈடாக வைத்துக் கொண்டு கடன் கொடுத்த லேவாதேவிக்காரருக்கும், நிலத்தை அடமானம் வைத்துக் கடன் பட்டுள்ள சிறுசிறு நிலச் சொந்தக்காரர்களுக்கும், ஓராண்டு கடன் ஒத்திவைப்புச் சட்டத்தால், காதொடிந்த ஊசியளவும் நன்மையில்லை. கடன் கொடுத்தவனுக்குத் தொல்லையும் இல்லை; கவலையும் இல்லை! நிலத்தை ஈடுகாட்டிக் கடன் பட்டுள்ள சிறு நிலச் சொந்தக்காரனுக்கும், சட்டத்தினுல் ஓராண்டு காலத்திற்குச் சந்தோஷம் ஏற்படவும் இடமில்லை; சஞ்சலம் மறையவும் மார்க்கமில்லை!

ஏழை விவசாயி, சர்க்காரிடம் பெற்றுள்ள கடனையும், நில அடமான பாங்கிகள் மூலம் பெற்றுள்ள கடனையும், ஓராண்டு கடன் ஒத்திவைப்புச் சட்டம் கட்டுப்படுத்தவில்லை. அதன் நடைமுறை என்றும் இருந்துவருவதாகும்.

சொத்தை ஈடு காட்டாமல் ஏழை விவசாயிகள் கடன் பெறுவது பெரும்பாலும் கிடையாது. எனவே, நாணயத்தின் மீது கடன்பட்டுள்ள சில ஏழை விவசாயிகள்தான், இந்த ஓராண்டு காலத்தில் சட்டப்படியான கெடுபிடி வசூலுக்கு உள்ளாகாமல் தப்பி இருக்கிருர்கள். சென்னை மாநிலம் முழுதும் நூற்றுக்கணக்கில் தான் இவர்கள் தொகை இருக்கும்.

இந்த ரக விவசாயிகள் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தால் பெற்றுள்ள ஓராண்டு நிவாரணத்தைக் காட்டிலும், அந்தச் சட்டத்தின் உடனடி பலனுக இனி அவர்கள் பெற இருக்கிற தீங்கு கூடுதலாகும் — கொடுமையானதுமாகும். அதாவது, சொந்த நாணயம் ஒன்றையே ஈடுகாட்டிக் கடன் பெற்றுக்கொண்டிருந்த அவர்களை, இனியும் முன்பு கடன் கொடுத்து வந்தவர்கள் நம்பிக் கடன் கொடுக்க முன்வருவார்களா என்பது ஐயத்திற்குரியதே. நாணயத்தின் மீது கடன் பெறுவது என்பது இனி பலர் விஷயத்தில் எதிர்பார்க்க முடியாதது. ஒருவர் இருவர் விஷயத்தில் இது சாத்தியமாகக்கூடும். அதாவது, கடன் ஒத்திவைப்புச் சட்டத்தைப் பொருட்படுத்தாமல், கடந்த ஓராண்டு காலத்திற்குள், கடன் கொடுத்தவன் கேட்காமலே, எவர்பட்டக்கடனைத் திருப்பிக் கொடுத்திருக்கிருர்களோ, அவர்களுக்குத்தான் இனியும் சொந்த நாணயத்தின் மீது கடன் பெறுவது என்பது இயலக்கூடும். மற்ற ஏழை விவசாயிகள் இந்த சட்டத்தின் விளைவாகப் பெறப் போவது நஷ்டம்—கஷ்டம்.

கடன் ஒத்திவைப்புச் சட்டத்தால் சிறு சிறு நிலம் படைத்த ஏழை விவசாயிகளுக்கு ஏற்பட்டிருப்பது நன்மையல்ல, தீமையே என்றும், நிலத்தை அடமானம் வைத்துக் கடன்பட்டிருக்கிறவர்களுக்கு, இச்சட்டம் எந்தவிதச் சிறு பரிகாரத்தையும் ஓராண்டு காலத்தில் தரவில்லை என்றும் இதுவரை விளக்கமாகக் கூறினேம்.

கடந்த ஓராண்டு காலத்தில் சட்டத்தின் மூலம் கூடுமான வரை பரிகாரமடைந்துள்ளவர்கள் எவர் என்பதைப் பார்ப்போம். நிலத்தை அடமானம் வைக்காமல் கடன் பெறுவதற்கான வாய்ப்பும் வசதியும் கொண்டிருப்பவர்கள் பெரும் பெரும் நிலச் சொந்தக்காரர்களேயாவர். அவர்கள் பட்ட கடனை, சட்டப்படி கெடுபிடி செய்து வசூல் செய்வதிலிருந்து அவர்களுக்குக் கடன் கொடுத்தவர்களை, ஓராண்டு காலமாக மேற்படி சட்டம் தடை செய்து வந்திருக்கிறது.

நிலப் பிரபுக்களுக்குக் கடன் கொடுப்பவர்களாக இருந்தாலும், மற்றவர்களிடம் கடன் பட்டிருக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கும் உண்டு. வட்டித் தொழிலின் உள் இரகசியமே இதுதான். இந்த அடிப்படையின் மீதுதான் அந்தத் தொழிலே கட்டப்பட்டு இருக்கிறது.

தொழில் முறைப்படி நிலப் பிரபுக்களுக்கு ஆயிரம் ஆயிரமாகக் கடன் கொடுத்தவர்களும், பிறருக்குக் கடன் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. வட்டித் தொழிலையே வாழ்க்கைக்கு நம்பிக் கிடப்பவர்கள், கடன் ஒத்திவைப்புச் சட்டத்துக்குள் பதுங்கிக் கொண்டு, தாங்கள் கொடுத்த இடத்தில் வசூலாகவில்லை என்பதற்காக, தங்களுக்குக் கடன் கொடுத்தவர்களுக்குத் தவனை சொல்ல ஒப்பார்கள். கூடுமானவரை தாங்கள் பெற்றக் கடனை தவணை கடவாமல் கொடுத்தால்தான், மேலும் அந்தத் தொழிலைத் தொடர்ந்து நடத்திவர முடியும். அந்த நெருக்கடியின் காரணமாக, தங்களிடம் கடன் பெற்றிருக்கிற நிலப் பிரபுக்களிடமிருந்து பஞ்சாயத்து மூலம் பேரம் பேசி, வசூலான வரையில் இலாபமெனக் கருதி, கொடுத்தக் கடனைக் குறைத்துப் பெற்றுக்கொள்ளவும் முந்துவர். இப்படி பேரம் பேசி நிலப் பிரபுக்களிடமிருந்து கொடுத்தக் கடனைத் திருப்பிப் பெறும் ஏற்பாட்டிற்குத்தான், ஓராண்டு கடன் ஒத்திவைப்புச் சட்டம் சிறந்த கருவூலமாக இருந்திருக்கிறது. கடன்பட்ட நிலப்பிரபுக்களே கூட, கொடுத்தக் கடனை வசூலிக்கக் கடன் கொடுத்தவர்கள் வழக்கு மன்றம் செல்லுவதாக இருந்தாலும், அதற்காகக் கூடும் செலவையும் நாம்தானே முடிவில் கொடுத்தாக வேண்டும் என்று அஞ்சியும் யூகித்தும், இருக்கும் நிலத்தை விற்ருவது சட்டம் காலாவதியாவதற்குள், ஒன்றுக்குப் பாதியாகவாவது கடனைத் திருப்பிக் கொடுத்து, ‘கவுரவ’மென ஒன்று இருந்தால், அதையாவது காப்பாற்றிக் கொள்ளுவோம் எனவலியக் கடனைப் பைசல்செய்ய முன்வருவதும் எதிர்பார்க்கக் கூடியதே!

இப்படி முயற்சி எடுத்துக் கொள்ளும் கடன் பட்ட நிலப் பிரபுக்களுக்கும், ஆச்சாரியார் கடன் ஒத்திவைப்புச் சட்டம் உற்ற தோழனுக உதவி செய்திருக்கிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது. எனவே, சட்டத்தால் பொதுவாகவும் குறிப்பாகவும் நன்மை அடைந்துள்ளவர்கள் பெரும் பெரும் நிலப்பிரபுக்களேயாவர் என்பதே நமது முடிவு.

“நெல்லுக்கிறைத்த நீர், வாய்க்கால் வழியோடி, புல்லுக்குமாங்கே பொசியுமாப் போல்” கடன்பட்ட பெரிய நிலப் பிரபுக்களை, கெடுபிடி வசூலிலிருந்து காப்பாற்ற அன்பர் ஆச்சாரியாரால் இயற்றப் பட்ட ஓராண்டு கடன் ஒத்திவைப்புச் சட்டம், சிற்சில சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கும் பயன் விளைவித்திருக்கிறது என்பதே பொருத்தமுடையதாகும். இது பற்றி மேலும் எழுதுவோம்.

## திரு-கொச்சியில் கேரள தோட்டத்தொழிலாளர் சங்கவாதிகள் உண்ணுவிரதம்

### பதினறு நாட்களாக மேற்கொண்டுள்ளனராம்!

**திருவனந்தபுரம், நவ. 30—கேரள தோட்டத் தொழிலாளர் சங்கச் செயலாளரான எச். பி. கே. மாதவன், மற்றும் கே. ஆர். கிருஷ்ணன் ஆகியோர் தங்களது உண்ணுவிரதத்தை 16-வது நாளாகியும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர்.**

‘ரன்னி’ எனும் இடத்திலிருக்கும் ‘மாதவன்’ தோட்ட அலுவலகத்தின் முன் தங்கள் உண்ணுவிரதப் போரை நடத்தி வருகின்றனர் எனத் தெரிகிறது.

திரு—கொச்சி, தோட்டத் தொழிலாளர் சங்கச் செயலாளரான ஏ. சுப்பையா என்ற தோழரும் 12-வது நாளாக இன்று தொடர்ந்து உண்ணுநோன்பிருந்து வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்பதுட்பட பல கோரிக்கைகளுக்காக இவர்கள் தொழிலாளர்களின் சார்பில் உண்ணுநோன்பை மேற்கொண்டு வருகின்றனர்

தொழிலாளர் இலாகா அதிகாரி சமரசத்திற்கு முயற்சித்து தோல்வியடைந்துவிட்டாராம்.

தொழிலாளரின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு இந்த தகராறில் சர்க்கார் தலையிட்டு நல்ல முடிவுகாண வேண்டுமென, சட்டசபை உதவி சபாநாயகர் உட்பட பல சட்டசபை அங்கத்தினர்கள் சர்க்காரைக் கேட்டுக்கொண்டுள்ளனர் எனத் தெரிகிறது.

## போட்டி சங்கங்கள்

### தடுப்பது பற்றி யோசனை

திருநெல்வேலி, நவ. 29—

“ஒரே தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்கள் பல சங்கங்கள் வைத்துள்ளனர்; எந்தத் தொழிலிலும் போட்டிச் சங்கங்கள் இருப்பது தொழிலாளர் நலனுக்கும், முன்னேற்றத்துக்கும் முட்டுக்கட்டையாகும்; நிர்வாகிகள் தங்களுக்கென ஒரே நிறுவனம் வைத்திருக்கிருர்கள்; ஆனல், தொழிலாளர்கள்தான் பல தொழிற் சங்கங்களை வைத்துக்கொள்கின்றனர்;

“இதனுல் உற்பத்தி தடைப்படுவதைத் தவிர்க்கவும், தொழிற் சங்கங்களை, தொழிலாளர் தலைவர்கள் தம் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக்கொள்வதைத் தடுக்கவும், சட்டமியற்றுவது பற்றியும் அரசாங்கம் யோசித்து வருகின்றது.

“இப்போது அமுலிலிருக்கும் சட்டத்தைத் திருத்துவதின் மூலம் அல்லது புது சட்டமியற்றுவதின் மூலம் அவ்வாறு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலையும், கருத்துக்களையும் சென்னை மாநில தொழிலாளர் நல இலாகா மந்திரி திரு. எம். பக்தவத்சலம் கூட்டமொன்றில் தெரிவித்திருக்கிருர்.

## நடவடிக்கைக்குப் பின்

பல்வேறு ரயில்வேக்களில் டிக்கெட்டு இல்லாமல் பிரயாணம் செய்பவர்களைக் கண்டுபிடிப்பதற்காக, இந்திய ரயில்வேக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக 1954 ஜனவரி 1-ந் தேதியிலிருந்து அக்டோபர் 31-ந் தேதி வரை உள்ள காலத்தில் மொத்தம் ரூ. 8,44,313 செலவழித்துள்ளனர் என்றும், அவற்றின் பலனுக மொத்தம் ரூ. 15,43,682 வசூலாயிற்று என்றும், உதவி ரயில்வே போக்குவரத்து மந்திரி ஒ. வி. அளகேசன் மக்கள் சபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் வெளியிட்டார்.

மற்றொரு கேள்விக்குப் பதில் அளிக்கையில், 1947 ஜனவரி 1-ந் தேதியிலிருந்து 1954 அக்டோபர் 31-ந் தேதி வரை உள்ள காலத்தில், டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்துவந்த மாணவர்கள் மொத்தம் 237 சந்தர்ப்பங்களில் மோசமாக நடந்துகொண்டனர் என்றும், பலாத்காரத்தை மேற்கொண்டனர் என்றும், அவர் தெரிவித்தார்.

# இலங்கைச் சுற்றுப்பயணத்தில் இரா. நெடுஞ்செழியன்

## எங்கணும் தி. மு. கழக எழுச்சி

## தமிழ்ப் பெருமக்களின் தணியா தமிழ் ஆர்வம்

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் இலங்கை உள்நாட்டுப் பகுதி சுற்றுப்பிரயாணத் தொடர்பில், கொழும்பு, யாழ்ப்பாணம், திரிகோணமலை, கண்டி, மாத்தளை, அக்குறணை ஆகிய நிகழ்ச்சிகள் முன்னர் தரப்பட்டுள்ளன. அவருடைய சுற்றுப்பயணத்தின் மற்றைய பகுதிகளின் நிகழ்ச்சி விவரங்கள் இங்கே தரப்படுகின்றன.

### நுவரேலியா

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் அவரோடு வந்த நண்பர்களும் 22—10—54-ம் நாள் நண்பகல் வரையில் அம்பாலவாட எஸ்டேட்டில் ஓய்வு எடுத்துக் கொண்ட பிறகு, மாலை 2-30 மணிக்கு அங்கிருந்து முப்பத்தைந்து மைல் தொலைவிலுள்ள நுவரேலியா என்ற மலைநகரில் நடைபெற வேண்டிய தமிழ்க் கழகச் சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்குப் புறப்பட்டனர். தோழர் நெடுஞ்செழியனோடு எஸ்டேட்டைச் சேர்ந்த சில நண்பர்களும் உடன் வந்தனர்.

#### புஸ்ஸெல்லவா வரவேற்புக் கூட்டம்

வழியில் புஸ்ஸெல்லவா என்ற ஊரில் கழகத் தோழர்களும், பொதுமக்களும், வியாபாரிகளும் கூடிநின்று தோழர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு மலர்மாலைகள் சூட்டி, வாழ்த்தொலிகளோடு வரவேற்றனர். அதிர்வெடிகளும் போடப்பட்டன.

அருகிலிருந்த ஒரு கல்லூரி மண்டபத்தில் சிறிது நேரம் பேச வேண்டும் என்று கழகத் தோழர்களும் பொதுமக்களும் விரும்பிக் கேட்டுக் கொள்ளவே தோழர் நெடுஞ்செழியன் சிறிது நேரம் பேச இசைந்தார். திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் அவர்கள் தலைமை வகிக்கக் கூட்டம் நடைபெற்றது. தோழர் நெடுஞ்செழியன் "மாணவர் கடமையும மக்கள் கடமையும்" என்னும் பொருள் பற்றி அரைமணி நேரம் அரிய சொற்பொழிவு ஒன்று ஆற்றினார். கல்லூரி தமிழாசிரியர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

#### தமிழ்க் கழகச் சிறப்புக் கூட்டம்

தோழர் இரா. நெடுஞ்செழியன் மாலை 5 மணி அளவிற்கு நுவரேலியா வந்து சேர்ந்தார். நுவரேலியாவிலுள்ள அழகிய தோட்டத்தைச் சுற்றிப் பார்ப்பதற்காக நேரே அவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

நுவரேலியா தமிழ்க்கழகத்தின் சிறப்புக் கூட்டம், நுவரேலியா நகர மண்டபத்தில் கூட்டப்பட்டது. ஜில்லா ஜட்ஜ், வழக்கறிஞர்கள், பாதிரிமார்கள், வணிகர்கள், நகரசபைத் தலைவர், ஆசிரியர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், பெண்கள் முதலிய பல்வேறு தரத்தினரும் ஏராளமாகக் கூடியிருந்தனர். மண்டபத்தில் இடம் போதாத காரணத்தால், மண்டபத்தின் வெளித் தாழ்வாரத்திலும் ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர்.

கூட்டத்திற்குத் தமிழ்க் கழகத்தின் தலைவர் தோழர் சோ. திருநாவுக்கரசு அவர்கள் தலைமை தாங்கினார்கள். தலைவர் தம் முன்னுரையில் தமிழ்க் கழகத்தின் நோக்கம், நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பற்றிக் கூறிவிட்டுத் தோழர் நெடுஞ்செழியனைப் பாராட்டி வரவேற்றுப் பேசினார். பின்னர் பல தி. மு. க. கிளைகளின் சார்பாகவும், தொழிலாளர் சங்கங்களின் சார்பாகவும், தமிழ்ச் சங்கங்களின் சார்பாகவும் மலர்மாலைகள் தோழர் நெடுஞ்செழியனுக்குச் சூட்டப்பட்டன. தோழர் இரா. நெடுஞ்செழியன், "வள்ளுவர் வகுத்த வழி" என்னும் பொருள் பற்றி ஆராய்ச்சிக் கருத்துக்களோடு, நயப்பாடு தோன்ற, நகைச்சுவை மிளிர, அழகுறப் பேசினார். சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு மேலாக அவர் ஆற்றிய சொற்பொழிவைப் பொதுமக்கள், அமைதியோடும், ஆர்வத்தோடும் கேட்டுக் களித்தனர்.

தலைவர் முடிவுரை கூற, தமிழ்க் கழகச் செயலாளர் நன்றி நவிலக் கூட்டம் இனிது முடிந்தது. பின்னர் தமிழ்க் கழகத் தோழர்களால் தேனீர் விருந்து ஒன்று அளிக்கப்பட்டது.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், ஏனைய நண்பர்களும் இரவு ஓய்வு எடுக்க அம்பாலவாட எஸ்டேட்டுக்குச் சென்றனர்.

### பதுளை

அம்பாலாவிலிருந்து சுமார் 70-மைலுக்கு அப்பாலுள்ள பதுளை என்ற நகரிலுள்ள தரும தூதக் கல்லூரிக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ள தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தோழர்கள் சேதுராமன், மாணிக்கம் ஆகியோரும் 23—10—54ம் நாள் காலை 6-மணிக்குப் புறப்பட்டனர். பகல் 11 மணிக்கு பதுளை வந்து சேர்ந்தனர்.

#### தருமதூதக் கல்லூரித் தமிழ் மாணவர் ஆட்சி மன்றச் சிறப்புக் கூட்டம்

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை நகர எல்லையில் தி. மு. கழகத் தோழர்கள் கழகக் கொடிகளுடன் வந்திருந்து மிக்க ஆர்வத்தோடு வரவேற்றனர். அவருக்கு மலர் மாலைகள் சூட்டினர். கல்லூரி மாணவர்கள் சிலரும் வந்து வரவேற்பளித்தனர்.

தி. மு. கழகத் தோழர்கள் ஏறியிருந்த கார் முன் வழிகாட்டிச் செல்ல, தோழர் இரா. நெடுஞ்செழியன் தருமதூதக் கல்லூரி வந்து சேர்ந்தார். கல்லூரித் தலைவரும், ஆசிரியன்மார்களும், மாணவர்களும் வாயிற்படியில் வந்திருந்து மலர் மாலை சூட்டித் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை சொற்பொழிவு மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும் ஏராளமாகக் குழுமியிருந்தனர்.

கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் கூட்டத்திற்குத் தலைமையேற்றார். தோழர் இரா. நெடுஞ்செழியன் "மங்காத தமிழ்" என்னும் பொருள் பற்றி சிறந்த எடுத்துக் காட்டுகளோடு சுமார் ஒரு மணி நேரம் சொற்பொழிவாற்றினார். தலைவர் பின்னுரை நன்றி கூறலோடு கூட்டம் முடிவெய்தியது.

#### தி. மு. கழக வரவேற்புக் கூட்டம்

தருமதூதக் கல்லூரிக் கூட்டத்தில் மாணவர்களைத் தவிர, பொது மக்கள் அனுமதிக்கப்படாத காரணத்தால், தனியே பொதுக் கூட்டம் ஒன்றில் பேசவேண்டும் என்று பதுளை திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வற்புறுத்தினார்கள்.

பதுளை பாடசாலை மண்டபம் ஒன்றில் தி. மு. கழகத்தினர் வரவேற்புப் பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர். பதுளையைச் சுற்றியுள்ள பல தோட்டங்களிலிருந்தும் ஏராளமான தோட்டத் தொழிலாளர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பகல் 12-30 மணிக்கு வந்திறங்கியதும் கூட்டத்தினர் வாழ்த்தொலிகள் முழக்கி வரவேற்றனர்.

கூட்டத்திற்குத் தோழர் இரணியன் அவர்கள் தலைமை ஏற்றார்கள். பதுளை கிளை, தெமோதர கிளை, நமுனுகுல கிளை, அரிசிப்பத்தனை கிளை, "சமூக முன்னேற்றம்" பத்திரிகாலயம் ஆகியவற்றின் சார்பாகத் தோழர் நெடுஞ்செழியனுக்கு மலர் மாலைகள் அணிவித்தனர்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் எல்லோருக்கும் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல், பொருளாதார, சமூகக் கொள்கைகள் பற்றியும், இலங்கையிலுள்ள தி. மு. கழகங்களின் கடமைகள் பற்றியும் சுமார் $1\frac{1}{4}$ மணி நேரம் அரிய சொற்பொழிவாற்றினார். அந்தச் சொற்பொழிவு கழகத் தோழர்களுக்கும், பொது மக்களுக்கும் கழகக் கருத்தைப்பற்றிய நல்ல தெளிவையும், புதியதொரு ஊக்கத்தையும் ஊட்டியது என்னலாம். நன்றி கூறலோடு கூட்டம் முடிவுற்றது.

பின்னர் கல்லூரித் தமிழ்க் கழகத்தாரால், இளைப்பாற்று விடுதியில் தோழர் நெடுஞ்செழியன் அவர்களுக்கும் அவரோடு வந்த நண்பர்களுக்கும் விருந்து அளிக்கப்பட்டது.

விருந்திற்குப் பிறகு எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு மட்டக்களப்புக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மாலை 2-30 மணிக்குப் புறப்பட்டார்.

### மட்டக்களப்பு

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மாலை 5-30 மணிக்கு மட்டக்களப்பு வந்து சேர்ந்தார். மட்டக்களப்புத் தமிழ்க் கலை மன்றத்தின் துணைத் தலைவர் பண்டிதர் ஆ. சபாபதிப் பிள்ளை, செயலாளர் திருநாவுக்கரசு, தி. மு. கழகத் தோழர்கள் ஆகியோர் மட்டக்களப்பு இளைப்பாற்று விடுதியில் இருந்து தோழர் நெடுஞ்செழியனை வரவேற்றனர். பிறகு அரை மணி நேரம் அவர் ஓய்வு எடுத்துக் கொண்டார்.

#### தமிழ்க் கலை மன்றம் பொதுக்கூட்டம்

மட்டக்களப்புத் தமிழ்க் கலை மன்றத்தின் பொதுக்கூட்டம் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் மிகச் சிறப்பாகக் கூட்டப்பட்டிருந்தது. தமிழ் கற்றறிந்தோரும், அரசாங்க உயர்தர அலுவலாளர்களும், மாணவர்களும், பெண்களும், பொதுமக்களும் மண்டபத்தின் உள்ளும், புறமும், வெட்டவெளியிலும் கூடியிருந்தனர்.

தமிழ்க் கலை மன்றத் துணைத் தலைவரும், செயலாளரும் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை அழைத்துக்கொண்டு மாலை 6-மணிக்கு மண்டபத்தில் நுழைந்தனர். கூடியிருந்தோர் கையொலி எழுப்பி ஆரவாரஞ் செய்து வரவேற்றனர்

கூட்டத்திற்குப் பண்டிதர் ஆ. சபாபதிப் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்கள். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பெருத்த கைத் தட்டல்களுக்கிடையே எழுந்து, "நாடும் ஏடும்" என்னும் பொருள் பற்றிச் சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக இலக்கிய நயம், தமிழின் சிறப்பு, சீர்திருத்தக் கருத்துக்கள் ஆகியவை பற்றியும், நாட்டுக்கு ஏற்ற ஏடுகள் எவைகள் என்பது பற்றியும் ஆராய்ச்சி மிக்க சொற்பொழிவு ஆற்றினார். தலைவர் முடிவுரை கூற, செயலாளர் நன்றியுரை நவில கூட்டம் வாழ்த்தொலிகளோடு இனிது கலைந்தது.

கூட்டம் முடிந்தவுடன் இலங்கை தமிழரசுக் கழகத் (இங்குள்ள தமிழரசுக் கழகத்துக்குச் சிறிதும் தொடர்பில்லாது வேறுபட்டது) தலைவர் செல்வநாயகம் அவர்களோடு தோழர் நெடுஞ்செழியன் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தார்.

மட்டக்களப்புக் கல்லூரி மண்டபம் ஒன்றில் நடைபெற்ற பகுத்தறிவு இயக்கப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள தோழர் இரா. நெடுஞ்செழியனும் ஏனையோரும் சென்றனர்.

#### பகுத்தறிவு இயக்கப் பொதுக் கூட்டம்

மட்டக்களப்பு பகுத்தறிவு இயக்கம் பல கஷ்டநஷ்டங்களுக்கிடையே, வைதீகர்களின் தீவிர எதிர்ப்புக்களுக்கிடையே சிறந்தோங்கி வளர்ந்துவருவதாகும். ஆர்வமும், எழுச்சியும் கொண்ட இளைஞர்களால் செவ்வனே நடத்தப்பட்டு வருகிறது.

பகுத்தறிவு இயக்கப் பொதுக் கூட்டம் இரவு 9 மணி அளவிற்குக் கூட்டப்பெற்றது. கூட்டத்திற்குத் தோழர் செ. இராசதுரை அவர்கள் தலைமை தாங்கினார்கள். செயலாளர் தோழர் இரா. பத்மநாதன் அவர்கள் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வாழ்த்துமடல் ஒன்று படித்தளித்தார். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பகுத்தறிவு இயக்கக் கொள்கையின் சிறப்புப் பற்றியும், பகுத்தறிவுக் கொள்கைகள்தாம் இறுதியில் வெற்றிபெறும் என்றும் பகுத்தறிவு அடிப்படையில்தான் உலகம் வளர்ந்துகொண்டு வருகிறது என்பதுபற்றியும், வைதீகக் கருத்துக்கள் எப்படித் தேய்ந்து கொண்டு வருகின்றன என்பது பற்றியும் விளக்கமாக விரிவுரையாற்றினார். கூட்டத்திற்குத் தமிழரசுக் கழகத் தலைவர் செல்வநாயகம் அவர்கள், மற்றும் பல்வேறு திறத்தினரும், கழகத் தோழர்களும் வந்திருந்தனர். தோழர் க. கந்தசாமி அவர்கள் நன்றியுரை கூற கூட்டம் 10-15 மணிக்கு முடிவுற்றது.

இரவு மட்டக்களப்புத் தமிழ்க் கலை மன்றத்தாரால் இளைப்பாற்று விடுதியில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும், ஏனைய நண்பர்களுக்கும் விருந்து அளிக்கப்பட்டது.

பகுத்தறிவு இயக்க உறுப்பினர்கள் தோழர் நெடுஞ்செழியனோடு சேர்ந்து கூட்டுப் புகைப்படம் ஒன்று எடுத்துக்கொண்டனர். இளைப்பாற்று விடுதியில் இரவு ஓய்வு எடுத்துக்கொண்ட பிறகு 24—10—54-ம் நாள் விடியற்காலையில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் அவரது நண்பர்களும், கழகத் தோழர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, கொழும்பு நோக்கிப் புறப்பட்டனர். மட்டக்களப்புக்கும் கொழும்புக்கும் இடையில் 195 மைல் தொலைவு ஆகும். தோழர் இரா. நெடுஞ்செழியன் இலங்கை உள்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தை ஆறு நாட்களில் முடித்துக்கொண்டு மீண்டும் கொழும்பு நகருக்கு 24—10—54ம் நாள் பகல் 12-30 மணிக்கு வந்து சேர்ந்தார். இந்தச் சுற்றுப்பயணம் இலங்கையின் பல பகுதிகளிலுள்ள தி. மு. கழகத் தோழர்களுக்குப் பெருமையும், பூரிப்பும் தரும் வகையிலும், கழகத்தின் மதிப்பை ஆங்காங்கு வளர்க்கும் தன்மையிலும் அமைந்தது என்னலாம். (தொடரும்)

---

## ஆசியாவிற்கு உதவ ஐசனேவர் திட்டம்!

### வறுமையையும் கம்யூனிஸ்டு 'சதிவேலை'யையும் ஒழிக்கவாம்!

வாஷிங்டன், நவ. 29—

ஆசியாவுக்குப் பொருளாதார உதவி அளிப்பதற்கான பெரும் திட்டமொன்றை வரும் ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதி ஐசனேவர் அமெரிக்க சட்டசபையில் தாக்கல் செய்வார் எனத் தெரிகிறது.

ஆசியாவில் வறுமையையும், கம்யூனிஸ்டு 'சதி வேலை'களையும் ஒழிப்பதும்தான் அத்திட்டத்தின் நோக்கமாகும்.

அடுத்த சில ஆண்டுகளில் கோடிக்கணக்கான டாலர்கள் இத்திட்டத்தின் கீழ் ஆசிய நாடுகளுக்கு உதவி செய்யப்படும் எனத் தெரிகிறது.

பிரான்ஸ், பிரிட்டன் போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளும் இத்திட்டத்தில் ஒத்துழைக்க வேண்டும் என அமெரிக்கா கோரும் என்றும் தெரிகிறது.

தென் கிழக்கு ஆசியப் பாதுகாப்புத் திட்டத்(சீட்டோ)தின் கீழ் இவ்வுதவிகளை வழங்கி, கொழும்புத் திட்டத்தின் கீழ் அமுல் நடத்த அமெரிக்கா விரும்புகிறது.

---

## வரி விசாரணைக் குழு

### அறிக்கைகையெழுத்திடப்பட்டது

இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட வரி விசாரணைக் குழுவினரின் அறிக்கை தயாராகிவிட்டதென்று தெரிகிறது.

1953-ம் ஆண்டு எப்ரல் முதல் தேதியன்று இக்குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் தலைவர் டாக்டர் ஜீான்மத்தாய் ஆவார். தோழர் எல். மேத்தா, டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ், கே. ஆர். கே. மேனன், பி. வெங்கையா, டாக்டர் பி. கே. மதான், சர்தார் இந்திரஜித் சிங் ஆகியோர் வரி விசாரணைக் குழுவின் மற்ற உறுப்பினர்கள் ஆவார்கள்.

இக்குழுவினர் இந்திய உபகண்டம் முழுமையும் உள்ள மத்திய, ராஜ்ய, முனிசிபல் வரி விதிப்பு முறைகள் பற்றி ஆராய்ந்துள்ளனர் என்றும் தெரிகிறது.

இந்திய உபகண்டத்தில் வரி விதிப்பு முறைகளில் செய்யவேண்டிய மாறுதல்கள் குறித்தும், புதிதாக விதிக்கப்படவேண்டிய வரிகள் பற்றியும் அறிக்கை தயாரிப்பதாகத் தெரிகிறது.

இன்னும் பம்பாயில் வரி விசாரணைக் குழுவினர் டாக்டர் ஜான் மத்தாயின் தலைமையில்கூடி அறிக்கையில் கையெழுத்திட்டனர் என்று தெரிகிறது.

---

## விசித்திரமல்ல!

கல்கத்தா நகரின் எல்லைப்புறத்தில் உள்ள டாலிகஞ்ச் பகுதியில் உள்ள ஒரு வீடு, இதுகாறும் 'பேய்' வாழும் வீடாகக் கருதப்பட்டு வந்ததாம்.

திடீரென போலீசார் அந்த வீட்டை சோதனை செய்ததில், அது ஒரு வெடிகுண்டு தயாரிக்கும் தொழிற்சாலை என்ற உண்மை புலனாயிற்றாம்.

அண்மையில் கல்கத்தா நகரில் நடைபெற்ற சில கொள்ளை சம்பவங்களில் கையாளப்பட்ட கை வெடிகுண்டுகள் இங்கிருந்துதான் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறதாம்.

---

## வெற்றிலை பயிரிடுவோர் மாநாடு

29—11—54ல், வேலூரில், தோழர் டி. பி. மூர்த்தி தலைமையில் நடைபெற்ற வெற்றிலைப் பயிரிடுவோர் கூட்டத்தில், விரைவில், சென்னை மாகில வெற்றிலைப் பயிரிடுவோர் மாநாட்டை வேலூரில் நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டதுடன், மாநாட்டிற்கான வரவேற்புக் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர்: தோழர் பொன்னு ஆர். ரெங்கசாமி எம். எல். ஏ., செயலாளர்கள்: டி. பி. மூர்த்தி, இரா. சண்முகம்; விளம்பர உறுப்பினர்: வி. ஏ. இராமநாதன், ஜெகநாதன்; பொருளாளர்: கே. சிவப்பிரகாசம். மற்றும் பலர் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

## 111 மணி நேரம் இடைவிடா சைகிள் சவாரி

விருதை, டிச. 1—

விருதை தோழர் பக்கீர் முகமது, 111 மணி நேரம் இடைவிடாமல் சைக்கிள் சவாரி செய்து, கோவையில் 110 மணி நேரம் சைக்கிள் சவாரி செய்த பம்பாய் தோழர் ஹைதர் அலியை வென்றார்.

# காங்கிரஸ் ஆட்சியில் கொடிய குற்றங்கள் அதிகரித்தன

## கிராமங்களில் காணப்படும் பஞ்ச நிலையே காரணமாம்

## 1953-ல், சென்னை மாநிலத்தில் 13 முறை துப்பாக்கிப் பிரயோகம்

1953-ம் ஆண்டில், சென்னை மாநிலத்தில், கொடிய குற்றங்கள் அதிகரித்திருக்கின்றன என்றும், இதற்கு முக்கிய காரணம் கிராமங்களில் நிலவும் பஞ்ச நிலையே என்றும் சென்னை சர்க்கார் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

1953-ம் ஆண்டில், சென்னை மாநிலத்தில், கொடிய குற்றங்கள் முன்னைய ஆண்டில் நிகழ்ந்ததைக் காட்டிலும் அதிகமாக நிகழ்ந்துள்ளதாக அறியக் கிடக்கிறது.

**கொடிய குற்றங்கள், 1952ல் 47,273ம், 1953ல் 55,225ம் நடைபெற்றதாம்.**

**நாட்டிலே நடைபெற்ற கொள்ளைகள் 181-லிருந்து 239 ஆக உயர்ந்து காணப்பட்டதாம்.**

**திருட்டுக்குற்றம் 484-லிருந்து 503 ஆக உயர்ந்ததாம்.**

**வீடு நுழைந்து திருடும் குற்றங்கள் 10,481-லிருந்து 12,724 ஆக உயர்ந்ததாம்!**

1953-ம் ஆண்டில், சென்னை சர்க்கார், தனது போலீஸ் படையின் நிர்வாகம் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கை மேற்கண்ட செய்திகளைத் தெரிவிக்கிறது.

கொடிய குற்றங்கள் சென்னை மாநிலத்தில் அதிகரித்திருப்பதற்கு சென்னை சர்க்கார், கிராமப் பகுதிகளில் காணப்படும் பொருளாதாரப் பஞ்சமே காரணம் என்று கூறுகிறது.

இக்குறிப்பிட்ட காலத்தில், சென்னை சர்க்கார், தனது போலீஸ் படையின் திறமையும் ஒழுக்கமும் நல்ல முறையில் காணப்பட்டது என்று தெரிவித்திருக்கிறது.

கொடிய குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் (துப்பறிவதில்) போலீசாரின் திறமை 48·6 சதவிகிதம் என்றும், சென்ற பத்து ஆண்டு காலமாக இவ்வளவு அதிக சதவிகிதம் கொடிய குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் காணப்பட்டது கிடையாது என்றும் சர்க்காரின் அறிக்கை தெரிவிக்கிறது.

கொலைக் குற்றங்கள் மட்டும் சென்னை மாநிலத்தில் குறைந்து காணப்படுகிறது.

1952-ம் ஆண்டில் 980 கொலைகள் நடைபெற்றதாயும், 1953-ம் ஆண்டில் 971 கொலைக் குற்றங்கள் நடைபெற்றதாகவும் அறிக்கை தெரிவிக்கிறது.

குற்றங்களைத் துப்பறியும் (கிரைம்) இலாகா மிகவும் திறமையுடன் பணியாற்றியது என்று அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

வகுப்புத் துவேஷ நிகழ்ச்சிகளிலிருந்து சென்னை 1953-ம் ஆண்டில் விடுபட்டிருந்ததாம்; வேலூரிலும், சேலத்திலும் இந்து—முஸ்லிம்களிடையே ஏற்பட்ட சிறு கலவரத்தையன்றி வேறு நிகழ்ச்சிகள் எதும் நடைபெறவில்லையாம்.

சட்ட விரோதமாகக் கூட்டம் கூடி கலவரம் விளைத்தல் 993-லிருந்து 1354 தடவைகளாக உயர்ந்ததாம்.

பொதுவாக, சட்டமும் ஒழுங்கும் நிலவியது என்று கூறப்படுகிறது;

ஆனால், சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்ட 1953-ம் ஆண்டில் போலீசார் 13 தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிகிறது.

# தென்னாப்பிரிக்க புதிய பிரதமர்

## ஜோஹனஸ் ஸ்ட்ரீடம் தேர்ந்தெடுக்கப்பட்டார்!

பிரிடோரியா, நவ. 30—

தென்னாப்பிரிக்கப் பிரதம மந்திரியான டாக்டர் டேனியல் மலான் இன்று பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

அவரது பிரதம மந்திரி பதவிக்கு 61 வயதாகியுள்ள ஜோஹனஸ் ஸ்ட்ரீடம் எனும் தலைவரை தென்னாப்பிரிக்க தேசியக் கட்சியினர் தேர்ந்தெடுத்துள்ளனர் எனத் தெரிகிறது.

கட்சிக் கூட்டம் 90 நிமிடங்கள், முழுதும் பூட்டப்பட்ட அறைக்குள் நடைபெற்றதாம்.

71 வயதுடையவரும் இப்போது நிதி மந்திரியாயிருப்பவருமான ஹாவங்கா என்பவர் பிரதமராக வேண்டுமென மலான் விரும்பினாராம்.

அவரும் போட்டியிட்டார். ஆனால் இறுதி நேரத்தில் ஸ்ட்ரீடமை ஆதரிப்பவர்தான் அதிகம் எனத் தெரிந்ததும் தமது அபேட்சையை வாபஸ் வாங்கிக் கொண்டாராம்.

மலானின் ராஜினாமாவை ஏற்றுக்கொண்டு கவர்னர்-ஜெனரலான டாக்டர் ஜான்சன், ஸ்ட்ரீடமை அழைத்து புது மந்திரி சபை அமைக்கக் கோருவாராம்.

ஸ்ட்ரீடம், கட்சியில் ஒரு தீவிரவாதியாம் அவர், தென்னாப்பிரிக்காவுக்கு குடியரசு அந்தஸ்து வேண்டுமென இடைவிடாது பாடுபட்டு வருபவராம். அவர், மலான் மந்திரி சபையில் நிலமந்திரியாக இருந்தவராகும். இவரும் இனவெறிக் கொள்கையில் மலானுக்கு சளைத்தவரல்லவாம்.

# இன்னும் வேண்டுமாம்

ஆஜ்மீர், டிச. 1—

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 2,300 கோடியாகும். இதில் இதுவரை நடந்துள்ளதுபோக மீதமுள்ள திட்டங்களை நிறைவேற்ற இன்னும் ரூ 250 கோடி வேண்டும்" என்று, மத்திய நிதிமந்திரி சிந்தாமணி தேஷ்முக் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

# சிறப்புக் கூட்டம்

★

3-12-54 வெள்ளி மாலை 6 மணிக்கு

கோகலே மண்டபத்தில்

(ஆர்மேனியன் தெரு, சென்னை)

தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் தலைமையில்

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்

## "ஆகும் நெறி எது? ஆகா நெறி எது?"

என்னும் பொருள் பற்றி பேசுவார்

நன்கொடை அணா 8, 4

—தோழமைக் கழகம், சென்னை.

# மூன்று குழந்தைகள்!

சென்னை சிந்தாதிரிப்பேட்டையைச் சேர்ந்த பெண்மணி ஒருவருக்கு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பிறந்துள்ளன. மூன்றும் பெண் குழந்தைகள். சேய்களும் தாயும் சுகமே உள்ளனர்.

அல்போன்ஸா என்ற அந்தப் பெண்மணி பெற்றெடுத்த குழந்தைகள் முறையே நாலரை, மூன்று, மூன்றரை ராத்தல் எடையுள்ளனவாம்.

கடந்த நவம்பர் 29-ந் தேதியன்று இரவு நகரசபை நடத்தும் 'அசோக் வீஹாரி'ல் இப்பிரசவம் நடைபெற்றுள்ளது.

இக்குழந்தைகளின் தந்தையான அந்தோனிசாமி என்ற அச்சுத் தொழிலாளருக்கு ஏற்கனவே நான்கு குழந்தைகள் உண்டாம்.

# போர்ச்சுகல் ஏகாதிபத்தியத்தின் கொக்கரிப்பு

## காலனிகளைக் கைவிட மாட்டார்களாம்!

இந்தியாவிலிருக்கும் போர்ச்சுகீசிய திட்டுக்கள் மீது இந்தியப் பேரரசு, 'போர்' தொடுத்தால், போர்ச்சுக்கல் அரசாங்கம் இறுதிவரை போராடும் என, பிரதமர் சலாச்சர், போர்ச்சுகீசிய சட்டசபையில் கூறியிருக்கிறார்.

அவர் சொன்னார்:—

"பண்டித நேருவின், கடந்த 26-ந் தேதிய பிரசங்கம், 'பேச்சுவார்த்தைகள் அல்லது போர்,' என்ற இரண்டு வழிகள் மட்டுமே அவருக்கிருப்பதாகத் தெரிவிக்கிறது. போர்ச்சுகீசிய ஆதிபத்திய அதிகாரத்தை இந்தியாவிடம் தர வேண்டுமென பண்டிதர் விரும்புகிறார். இதை நாம் ஏற்றுக்கொள்ள இயலாது, எனவே, அவருக்கு போரிலிறங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்றே தோன்றுகிறது. என்றாலும், நேரு யுத்தத்திலிறங்க அஞ்சுகிறார். இந்தியா யுத்தத்தில் இறங்குமானால், நேரு, தனது அரசியல் கொள்கையையே காற்றில் பறக்கவிட வேண்டியிருக்கும்.

பேச்சுவார்த்தை நடத்த நாம் தயார்; ஆனால், போர்ச்சுகீசிய ஆதிபத்திய அதிகாரத்தை நாம் கைவிட முடியாது. இதற்கிடையில் நாம் இராணுவ பலத்தையும், பொறுமையையுமே நம்பியிருக்கவேண்டும். போர்ச்சுகீசியப் பகுதிகள் மீது இந்தியா போர் தொடுத்தால் நமது படைகள், 'ஆக்கிரமிப்பை' எதிர்த்து நிச்சயம் போர் புரியும்.

ஒரு போர்ச்சுகீசிய போர்வீரன் ஆயிரம் பேரையும்கூட எதிர்த்துப் போராடுவான்.

போர்ச்சுகீசிய பகுதிகளை 'கைப்பற்று'ம் நோக்கத்தைக் கைவிட்டு, இந்தியா, பேச்சுவார்த்தைகள் நடத்த முன்வர வேண்டும்," என்றும் டாக்டர் சலாச்சர் கொக்கரித்திருக்கிறார்.

★

## இந்தியப் பேரரசின் பதில்!

"போர்ச்சுகீசிய திட்டுக்களில் வாழும் மக்களின் விடுதலை வேட்கை ஒடுக்கப்படுவதற்கு இந்தியா ஒருக்காலும் உடந்தையாக இருக்க முடியாது. கோவா விடுதலை வீரர்கள் போர்ச்சுகீசிய திட்டுக்களுள் அறப்போர் புரிய புகுவதைத் தடுக்க இயலாது என்று இந்தியா பன்முறை தெளிவாகக் கூறியிருக்கிறது. ஆனால், போர்ச்சுகீசிய அரசாங்கம்தான் கால மாறுதலைக் கவனியாது, ஆயிரம் மைல்களுக்கப்பாலிருக்கும் டையூ, டாமன், பகுதிகளை போர்ச்சுக்கலின் மாகாணம் எனக் கூறிக்கொண்டிருக்கிறது. விடுதலைப் படையினர் பலவகைகளை செய்து நடவடிக்கை மேற் கொண்டிருக்கையிலேயே, சுதந்திர இயக்கமே எதுவும் இயங்கவில்லை எனக் கூறிக்கொண்டிருக்கிறது; எனவே, 'தவிர்க்க முடியாத தற்காப்பு நடவடிக்கை'களை போர்ச்சுகீசிய அரசாங்கம் மேற்கொள்ளுவதற்கான அவசியமே இல்லை."

இந்தக் கருத்துக்களடங்கிய பதிலை, போர்ச்சுக்கல் நாட்டு தூதுவரிடம் இந்தியா தந்துள்ளது.

போர்ச்சுக்கல் அரசாங்கம், "ம. சோ. கட்சியினர் டையூ டாமன் பகுதிகளில் பிரவேசிக்கப் போவதாக அடிக்கடி வதந்திகள் வெளி வந்துகொண்டிருப்பதாயும், இந்திய சர்க்கார், தங்கள் நடவடிக்கைகளின் மூலமோ அன்றி நடவடிக்கை எடுக்கத் தவறுவதின் மூலமோ, போர்ச்சுகீசிய அரசாங்கம் 'தவிர்க்க முடியாத தற்காப்பு நடவடிக்கைகளில்' ஈடுபடவேண்டும்படியாகச் செய்யமாட்டார்கள் என நம்புவதாக"வும் அனுப்பியிருந்த குறிப்புக்கு பதில் தரும் வகையில் இந்தக் குறிப்பை இந்திய அரசாங்கம் தந்துள்ளது.

# காங்கிரசில் வளர்ந்துவரும் கோஷ்டிச் சண்டை: மைசூர் மாநிலமும் போட்டியிடுகிறது!

## முதன் மந்திரிக்கும், கட்சித் தலைவருக்கும் மோதுதல்

### அனுமந்தையா நம்பிக்கை கோருகிறார்!

மைசூர் மாநிலத்தில் உள்ள காங்கிரஸ் அமைச்சரவைக்கும் பிரதேச காங்கிரஸ் குழுவிற்கும் இடையே 'பிளவு'கள் இருப்பது பற்றி அவ்வப்போது செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன அல்லவா?

இப்போது மாநில முதல்வரான அனுமந்தையா, தனது மந்திரிசபைக்கு ஆபத்து ஒன்றும் வந்து விடாதென 'அபயம்' கூறியிருக்கிறாராம்.

முன்பிருந்ததைக் காட்டிலும் இப்போது தம் மந்திரிசபையை எதிர்க்கிற காங்கிரஸ்காரர்கள் குறைந்திருப்பதாகக்கூட அவர் தெரிவித்திருக்கிறாராம்.

தனது தலைமைக்கு நம்பிக்கை தெரிவிக்குமாறு, சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்களைக் கேட்க விருக்கிறார்; அதில் தனக்கு வெற்றி கிடைப்பது உறுதி என்றும், அம்மாதிரி 'நம்பிக்கை தெரிவிப்புக்கள்' என்று கேட்கவேண்டிய நிலையொன்று உருவானதற்காகவே தான் வருந்துவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரதேச காங்கிரஸ் தலைவரான சித்தவனஹள்ளி நிஜலிங்கப்பா, திரு. அனுமந்தையாவின் தலைமையை விரும்பவில்லை என்பது தெரிந்தது தானே.

அவரும் அவரைச் சேர்ந்த கோஷ்டியும் அனுமந்தையாவின் மந்திரிசபைக்கு முடிவுகட்ட முனைந்து நிற்கிறார்களாம்.

அவருடன் பேச்சுவார்த்தைகள் மூலம் இருக்கும் கருத்து வேறுபாடுகளுக்கு முடிவுகூற இயலாது போய்விட்டதாக, முதன் மந்திரி அனுமந்தையா தெரிவித்திருக்கிறார்.

# மேயர் தலைமையில் கோயில் நுழைவு

பம்பாய் நகரின் மத்தியில் உள்ள இந்துக்களின் ஆலயம் ஒன்றில் பம்பாய் நகர மேயர் தயாள் பாய் பட்டேல் தலைமையில் 700 தாழ்த்தப்பட்ட மக்களின் கோவில் நுழைவு நடைபெற்றது என்று தெரிகிறது.

இந்த நிகழ்ச்சி நடைபெற்ற பகுதியான மாதவ் பாகில் வைஷ்ணவ கோவில் ஒன்று இன்னமும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்து விடப் படாமலேயே இருக்கிறது. இதைக் கண்டிக்கும் முறையில் இந்த ஆலய நிகழ்ச்சியை ஒட்டி ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாகத் தெரிகிறது.

# சென்னை சட்டசபை ஆரம்பம்

## கவர்னரின் வழக்கமான உரை

சென்னை, டிச. 1—

சென்னை மாநில சட்டசபை, மேல்சபை ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தில், சட்டசபைக் கூட்டத்தைத் துவக்கி வைத்து, கவர்னர் திரு. பிரகாசா உரையாற்றினார்.

அவர், தமது உரையில், முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முன்னேற்றம், விவசாய அபிவிருத்திக்கான திட்டம், இவை பற்றி கருத்தறிவித்திருக்கிறார்.

பிரெஞ்சுத் திட்டுக்கள் 'விடுதலை' பெற்றது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

மேலும், மத்திய அரசாங்கம் உதவும் ரூ. 3 கோடி பண உதவி கொண்டு, கிராமங்களுக்கு மின்சார வசதியளிக்கிற திட்டங்களை சர்க்கார் மேற்கொண்டிருப்பதாகவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறி முடிகிற காலத்தில் மாநிலத்தில் உள்ள பெரும்பாலான கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைக்கும் என்றார்.

"நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்க வேலையில் ஏற்படும் அபிவிருத்தி, மலிவான விலையில் எரி பொருள் கிடைக்கச் செய்யும்; அதைக் கொண்டு மின்சார வசதியினைப் பெருக்கிக் கொள்ள முடியும்; மேலும், அந்தச் சுரங்க வேலையையொட்டி, பல உப தொழில்களும் ஆரம்பமாகும்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி வருடமான இந்த 1955-56-ம் ஆண்டில், சென்னை மாநிலத்தில் திட்டமிடப்பட்டவை எல்லாம் நிறைவேற்றப்படுவதற்கான பெரு முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்றும் கவர்னர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

### எதிர்க் கட்சி அங்கத்தினர்

# வெளியேற்றப்பட்டார்

லாகூர், டிச. 1—

பாகிஸ்தான் பஞ்சாப் மாநில சட்ட சபையில் மாலிக் குலாம் என்ற எதிர்க்கட்சி அங்கத்தினர் சபைத் தலைவரைக் கண்டித்துப் பேசியதின் விளைவாக சபையை விட்டு வெளியேற்றப்பட்டார்; அவர் தற்போதைய கூட்டத் தொடர் முடியும்வரையில் சபைக்கு வரக் கூடாதென சபைத் தலைவர் உத்தரவு பிறப்பித்துள்ளாராம்.

# சோகச் செய்தி

ராபர்ட்சன் பேட்டை—

இங்குள்ள மைசூர் தங்கச் சுரங்கத்தில் ஒரு பாறை வெடித்ததினால் 4 பேர் கொல்லப்பட்டனர் என்றும், மற்றும் நால்வர் காயம் பட்டனர் என்றும் தெரிகிறது.

காயம் பட்டவர்கள் கோலார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனராம்.

### சல்லிபட்டியில் உழவுத் தொழிலாளர் கூட்டம்

8-12-54 வெள்ளியன்று, தஞ்சை வட்டாரம் சல்லிப்பட்டியில், உழவுத் தொழிலாளர் கழகத்தின் சார்பில், தோழர் முத்துச்சாமி தலைமையில், முத்தரசன் திடலில் நடைபெறும் சிறப்புக் கூட்டத்தில் தோழர் கே. ஏ. மதியழகன் பேசுவார்.

### திருமணங்கள்

5-12-54 காலை 10 மணிக்கு, சேலம், அரிசிபாளையத்தில், தோழர் கே. சுப்பிரமணியம்-தோழியர் பாக்கியம் திருமணம் தோழர் ஏ. சித்தையன் தலைமையில் நடைபெறும். அதசமயம் 'தமிழ் திருமணம்' என்பது பற்றி தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், டி. கே. நாமசெல்வன் ஆகியோர் பேசுவர்.

* * *

6-12-54 காலை 9 மணிக்கு, நாமக்கல் அடுத்த காதப்பள்ளியில், மணமகன் இல்லத்தில், தோழர் பசுபதிலிங்கம்-தோழியர் விசாலம் திருமணம் தோழர் ஏ. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெறும். அதுசமயம் பல தோழர்கள் வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.